<u>**சுருக்கம்**</u>

மாற்றுத் திறனாளிகள் நலன் – 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வு – மாவட்ட அளவில் முதல் 3 இடங்களைப் பெற்ற பார்வையற்ற மாற்றுத் திறனாளி மாணவ, மாணவியர்களுக்கு ரொக்கப் பரிசு, பாட புத்தகம், விடுதிக் கட்டணம் மற்றும் உயர்கல்வி பயில ஊக்கத் தொகை வழங்கும் திட்டம் – 2016–2017ஆம் ஆண்டிற்கு திட்டத் தொடராணை வழங்குதல் – ரூ.63,26,000/– நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (1டி) எண்: 35**

**நாள்: 27.04.2017**
**ஹேவிளம்பி – சித்திரை, 14**
**திருவள்ளுவர் ஆண்டு, 2048**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (1D) எண் 40, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை, நாள் 06.11.2015.
2. அரசாணை (1டி) எண் 69, மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந–1)த் துறை, நாள் 07.10.2016.
3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித எண் 4067/சிபதி/2016, நாள் 23.11.2016.

----

<u>**ஆணை:**</u>

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், அரசு மற்றும் அரசு உதவி பெறும் சிறப்புப் பள்ளிகளில் அரசு பொதுத் தேர்வில் தமிழை பயிற்று மொழியாக கொண்டு மாவட்ட அளவில் 10 மற்றும் 12ஆம் வகுப்பில் முதல் மூன்று இடங்களை பெறும் பார்வையற்ற மாணவ / மாணவியருக்கு ரொக்கப் பரிசுத் தொகை, புத்தகம் வாங்க மற்றும் விடுதி கட்டணம் வழங்கும் திட்டத்தின் கீழ் 2015–2016ஆம் நிதியாண்டிற்கு ரூ.57,12,000/– நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் மார்ச்/ஏப்ரல், 2016ல் நடைபெற்ற 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில், மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பார்வையற்ற, செவித்திறன் குறையுடைய மற்றும் வாய்பேச இயலாத மாணவ / மாணவியருக்கு ரொக்கப் பரிசு வழங்கும் திட்டத்தினை, 2016–17ஆம் நிதியாண்டில் செயல்படுத்த திட்டத் தொடராணையும், ரூ.3,80,000/– நிதி ஒப்பளிப்பு வழங்கியும், இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி வழங்கியும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் மார்ச்–2016ல் நடைபெற்ற அரசு பொதுத் தேர்வில் 10 மற்றும் 12ஆம் வகுப்பில் மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களை பெற்ற பார்வையற்ற மாணவ / மாணவியருக்கு ரொக்கப் பரிசுத் தொகை, உயர் கல்வி தொடர கட்டணம், பிரெய்ல் புத்தகம் வாங்க மற்றும் விடுதி கட்டணம் வழங்கும் திட்டத்தின் கீழ் 2016–2017ஆம் நிதியாண்டிற்கு ரூ.61,91,000/– (ரூபாய் அறுபத்தோரு இலட்சத்து தொண்ணூற்று ஓராயிரம் மட்டும்) நிதி ஒதுக்கீடு கோரி கருத்துரு அனுப்பப்பட்டதில், தொகை

மாறுபட்டு உள்ளதால், தற்போது கூடுதலாக ரூ.1,35,000/– தேவைப்படுகிறது எனவும், ஏற்கனவே கோரப்பட்ட தொகை ரூ.61,91,000/– மற்றும் தற்போது கூடுதலாக தேவைப்படும் தொகை ரூ.1,35,000/– சேர்த்து 2016–2017ஆம் நிதியாண்டிற்கு ரூ.63,26,000/– நிதி ஒதுக்கீடு வழங்குமாறு கோரியுள்ளார்.

4. மேலும், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள், மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற காது கேளாத மற்றும் வாய்பேச இயலாத மாணவ / மாணவியர்களுக்கு ரொக்கப் பரிசு வழங்க 2016–2017ஆம் நிதியாண்டிற்கு 2235–02–101–AA–5904 கணக்குத் தலைப்பின் கீழ் ரூ.1,45,000/– நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு மாவட்டங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து, கீழ்க்காணும் இனங்களுக்கு ஆணை வழங்குமாறு கோரியுள்ளார்:–

(1) 2016–2017ஆம் நிதியாண்டிற்கு ரூ.63,26,000/– (ரூபாய் அறுபத்து மூன்று இலட்சத்து இருபத்து ஆறாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு.

(2) 2016–2017 வரவு–செலவு திட்ட ஒதுக்கீட்டின்படி 2235–02–101–AA–5904 கணக்குத் தலைப்பில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.58,26,000/– போக கூடுதலாக தேவைப்படும் தொகை ரூ.6,45,000/–ஐ RE/FSE-ல் ஒதுக்கீடு செய்ய அனுமதி.

(3) இறுதி துணை மதிப்பீடு 2016–2017ல் கூடுதலாக ஒதுக்கப்படவுள்ள ரூ.6,45,000/– எதிர்நோக்கி மேற்படி செலவினத்தை மேற்கொள்ள அனுமதி.

5. மேலே பத்தி–3 மற்றும் 4ல் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, மார்ச் / ஏப்ரல், 2016–ல் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில், மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பார்வையற்ற மாற்றுத் திறனாளி மாணவ / மாணவிகளுக்கு ரொக்கப் பரிசு, உயர்கல்வி தொடர உதவித் தொகை, விடுதிக் கட்டணம் மற்றும் பிரெய்லி பாடப் புத்தகங்கள் வாங்கி வழங்கிட ரூ.63,26,000/– (ரூபாய் அறுபத்து மூன்று இலட்சத்து இருபத்தாறாயிரம் மட்டும்) (இணைப்பு–I மற்றும் IIல் உள்ளவாறு) நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:–

**“2235 – சமூக பாதுகாப்பும் நலனும் - 02- சமூகநலன் 101 மாற்றுத் திறனாளிகள் நலன் I – மாநிலச் செலவினங்கள் – AA – பார்வையற்றோர் பள்ளி – 59 – பரிசுகளும் வெகுமதிகளும் ” (து.தொ.கு. 2235–02–101–AA- 5904).**

7. மேலே பத்தி–5ல் அனுமதிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.63,26,000/– 2017–2018ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினம் 2017–2018ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் ஒரு குறிப்பிட்ட தொகை சேர்ப்பதன் மூலம் பேரவையின் பார்வைக்கு கொண்டு செல்லப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி–5ல் அனுமதிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், பத்தி–5ல் அனுமதிக்கப்பட்ட செலவினத்தை 2017–2018ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினையும் மற்றும் திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதித் (ச.ந.)/வ.செ.பொ–1) துறைக்கு அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் கேட்டுக்கொள்ளப் படுகிறார்.

8. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதல் பெற்ற அலுவல் சாரா எண் 17798/நிதி(சந)/2016, நாள் 24.04.2017–இன் படி மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண் 349 (முன்னூற்று நாற்பத்து ஒன்பது) (ASL No.) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்
அரசு முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ.)

**பெறுநர்**

அரசு இணைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான
மாநில ஆணையர், (மு.கூ.பொ.) சென்னை–78.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள்.
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
மாநிலக் கணக்காயர், சென்னை–18 / பெயரில்.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.

**நகல்:**

முதன்மைச் செயலரின் முதுநிலை தனிச் செயலர்,
மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சென்னை–9.
நிதி (சந) / (வ.செ.பொ–I& II) துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்